அந்தச் சாலையை இப்பொழுது அகலப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தச் சாலையையும் அகலப்படுத்த வேண்டுமெனக் கேட்டு, பண்டாரஊத்து கிராமத்திற்கு சாலை அமைப்பதற்கு அனுமதி தந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுக்கு மீண்டும் நன்றியைக் கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய அந்தச் சாலையை அகலப்படுத்துவதற்கு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 208, மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

208—

மாணவர் விடுதி

***25052—திரு. ந. நஞ்சப்பன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், ஏரியூர், நெருப்பூர், செல்லமுடி, பெரும்பாலை ஆகிய பகுதிகளிலுள்ள மேல்நிலைப் பள்ளிகளில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், ஏரியூர், நெருப்பூர் மற்றும் செல்லமுடி ஆகிய பகுதிகளில் செயல்பட்டுவரும் பள்ளிகளில் 1,286 பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் பயின்று வருகின்றார்கள். இவ்வூர்களின் அருகில் 8 கிலோ மீட்டர் தொலைவுவரை விடுதிகள் எதுவும் இல்லை. எனவே, இப்பகுதியில் மாணவர் விடுதி தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் தற்போது கண்டறியப்பட்டுள்ளன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்குக் கொண்டு செல்லப்பட்டு, ஆய்வு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 209, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. ராமசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

209—

ஆரம்ப சுகாதார நிலையம்

***1141—திரு. ஆ. ராமசாமி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நிலக்கோட்டை தொகுதி, பள்ளப்பட்டி மற்றும் தெப்பகுளத்துப்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். 30 ஆயிரம்